# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2017 சனவரி

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

இவ்வினாப்பத்திரம் – A, B, C, D என்னும் 4 பகுதிகளையும் 10 கட்டாய வினாக்களையும் கொண்டுள்ளது.

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

### வினா இல. 01

இவ்வினா முழுப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கியவாறு 10 உப வினாக்களைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொன்றும் 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகளைக் கொண்டிருக்கிறது.

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து தெரிவின் இலக்கத்தை மாத்திரம் விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விடையளித்திருந்தாலும் சில பரீட்சார்த்திகள் வினாப்பத்திரத்திலேயே விடையினை குறிப்பிட்டிருந்த அதே வேளை வேறு சில பரீட்சார்த்திகளோ விடையின் இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக முழு விடையையும் எழுதியிருந்தமை பொதுவாகக் காணப்பட்ட தவறுகளாகும்.

**1.6** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களில் தரப்பட்டிருந்த கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடும்படி கோரப்பட்டிருந்தது. இங்கு, மிகச் சில பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்கவில்லை. அவர்கள் சரியானது என்பதற்கு “V” என்னும் குறியீட்டையும் தவறானது என்பதற்கு “X” என்னும் குறியீட்டையும் பயன்படுத்தியிருந்தனர். அதேபோன்று சிலர் தெரிவுசெய்யப்பட்ட முழு விடையை யும்கூட எழுதியிருந்தனர். இது பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது.

மொத்தத்தில் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அதிகளவான புள்ளிகளைப் பரீட்சார்த்திகளால் பெற முடிந்திருந்தது. பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டம் மிகவும் திருப்திகரமானது.

## பகுதி B

இப்பகுதி ஒவ்வொன்று 5 புள்ளிகளைக் கொண்ட மொத்தம் 25 புள்ளிகளுக்காக 05 வினாக்களைக் கொண்டிருந்தது.

### வினா இல. 02

ஹென்றி பயோல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கோட்பாடுகள் 5 இனைக் குறிப்பிடுமாறு இவ்வினா கோரியிருந்தது. அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட 14 கோட்பாடுகளில் ஏதாவது 5 இனை குறிப்பிடு வதன் மூலம் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடிய சாத்தியக்கூறு காணப்பட்டது. இது ஒரு இலகுவான வினாவாகும். குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களை விவரித்து எழுதியிருந்தமையானது அவர்களுக்கு விடை தெரிந்திருக்கவில்லை என்பதைக் காட்டியது. எவ்வாறாயினும், இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை மட்டம் திருப்தியான ஒரு மட்டத்தில் இருந்தது.

## வினா இல. 03

அதிகாரத்திற்கும் பொறுப்புக்குமிடையிலான தொடர்பினை பரீட்சார்த்திகள் விபரிக்க வேண்டியிருந்தது. இவ்விரு கோட்பாடுகளுக்குமிடையிலான தொடர்பினை விபரிக்கும்போது, ஒவ்வொரு கோட்பாட்டினதும் அர்த்தம் முதலாவதாக விபரிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் பின்னரே அதன் தொடர்புடைமை விபரிக்கப்படுதல் வேண்டும். அதிகளவான பரீட்சார்த்திகள் அவ்விரு கோட்பாடுகள் பற்றியும் தெளிவாக விபரித்திருக்கவில்லை. ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்து முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இவ்வினாவுக்கு அளிக்கப்பட்ட குறைந்த மட்டத்திலான விடைகள், பரீட்சார்த்திகள் அத்தகைய இலகுவான கோட்பாடுகள் பற்றிக்கூட சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

## வினா இல. 04

இவ்வினா பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்காக திருப்திசெய்ய வேண்டிய 5 நிபந்தனைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் எதிர்பார்க்கப்பட்ட விடையைச் சரியாக எழுதக்கூடியதாக இருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாகவும் இருந்தது. சில பரீட்சார்த்திகள் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படை கோட்பாடுகள் வினவப்பட்டுள்ளதாக பிழையாக விளங்கிக்கொண்டு குழம்பியிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் தொடர்பாடலின் பண்புகளை ஒன்றன்பின் ஒன்றாக விபரித்து விளக்கமாக எழுதியிருந்தனர். வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கை மீது கவனத்தைச் செலுத்தாது தேவையற்ற விபரங்களை எழுதியிருந்ததன் மூலம் ஒதுக்கப்பட்ட நேரம் வீணடிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன், ஒரே விடயம் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டிருந்த சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாக இருந்தது.

## வினா இல. 05

இவ்வினாவில், பரீட்சார்த்திகள், ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படாமையை வெளிக்காட்டும் 5 அறிகுறிகளை குறிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த இலகுவான வினாவுக்கு மிகவும் திருப்திகரமான முறையில் விடையளித்திருந்தனர். அத்துடன் ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் ஊக்கம் மற்றும் ஊக்கமின்மை ஆகிய இரண்டையும் குழப்பியடித்திருந்ததுடன் ஊக்கப்படுத்தப்பட்டதை வெளிக்காட்டும் அறிகுறிகளை அவர்கள் எழுதியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள், ஊழியர்கள் எவ்வாறு ஊக்கப்படுத்தப்படல் வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். பரீட்சார்த்திகள், விடையளிப்பதற்கு முன்னர் வினாவை நன்கு வாசித்துச் சரியாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

## வினா இல. 06

இவ்வினாவில் கட்டுப்படுத்தலின் 5 நன்மைகளைக் குறிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்த போதிலும் பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது கட்டுப்படுத்தல் என்றால் என்ன, எதைக் கட்டுப்படுத்த முடியும் என்பது போன்ற சம்பந்தமற்ற விடயங்களை விபரமாக எழுதியிருந்த சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன், ஒரே நன்மையினை பல்வேறு வழிகளில் மீண்டும் மீண்டும் எழுதிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. எவ்வாறாயினும், விடைகளின் செயலாற்றுகை மட்டம் மிகவும் உயர்வானது.

# பகுதி C

## வினா இல. 07

இது முகாமைத்துவத்தில் தலைமைத்துவம் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு வினாவாகும். இது விளங்கிக்கொள்ளும் தன்மை மற்றும் பிரயோகம் ஆகியவற்றை உள்ளடக்கிய 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. பகுதி (a) தலைவர் ஒருவருக்கும் முகாமையாளர் ஒருவருக்கும் இடையிலான 3 வேறுபாடுகளை விபரிப்பதற்குத் தேவைப்படுத்தியிருந்தது. வேறுபாடுகளை விபரிக்கும்போது யார் தலைவர், யார் முகாமையாளர் என்பதை அடையாளம் காண்பதும் அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவருக்கு மிடையிலான வேறுபாடுகளை விபரிப்பதும் அவசியமானதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை எழுதி புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள், ஒரு விடயத்தை மாத்திரம் எடுத்து அதனை தேவையற்ற விதத்தில் விபரித்திருந்ததன் காரணமாக முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை. அத்தகையவர்கள் பாட விடயங்களைக் கற்று பரீட்சைக்காக நன்கு தயாரானதன் பின்னர் தோற்றுவார்களாயின் அவர்களால் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வினாவின் பகுதி (b) ஆனது தலைவர் ஒருவரின் நான்கு பண்புத்தரங்களை எழுதுமாறு கோரியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு திருப்திகரமாக விடையளித்திருந்தனர். குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் ஒரே பண்புத்தரங்களை வேறு வழிகளிலும் மீண்டும் மீண்டும் எழுதியிருந்தனர். இது ஒரு இலகுவான வினாவாக இருந்ததுடன் தலைவர் ஒருவரின் நான்கு பண்புத்தரங்களைப் பட்டியலிடுவதன் மூலம் இலகுவாக புள்ளிகளைப் பெற்றிருக்க முடியும்.

## வினா இல. 08

(a) பயனுறுதிமிக்க ஒழுங்கமைப்புச் செயன்முறையொன்றின் 4 நன்மைகளைக் குறிப்பிடுமாறும் (b) நிறுவன மொன்றின் பயனுறுதிமிக்க கலாசாரமொன்றை உருவாக்கச் சாத்தியமான நடவடிக்கைகள் மூன்றை விபரிக்கு மாறும் இவ்வினாவில் கோரப்பட்டிருந்தது. பகுதி (b) உடன் ஒப்பிடுகையில் பகுதி (a) இற்கு பரீட்சார்த்திகளால் திருப்திகரமாக விடையளிக்கப்பட்டிருந்தன. பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பது அவர்களின் விடைத்தாள்களை மதிப்பிடும் வேளையில் அறியக்கூடியதாக இருந்தது. 4 நன்மைகள் போதுமானதாக இருந்த போதிலும் சம்பந்தமற்ற விடயங்கள் விபரமாக எழுதப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

பயனுறுதிமிக்க கலாசாரம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பகுதி (b) இல் வினவப்பட்டதைப் பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக்கொண்டிருக்கவில்லை அல்லது பாட விடயங்களை கற்றுணரவில்லை. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே திருப்திகரமான விடைகளை எழுதியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் ஒழுங்கமைப்புக் கலாசாரம் பற்றிய அறிவோ, விளக்கமோ இல்லை என்பது அவர்களின் விடைகளிலிருந்து தெளிவாகியது.

## வினா இல. 09

இவ்வினாவின் பகுதி (a) ஆனது, மாற்றத்திற்கான தடைகளை வெற்றிகொள்ளும் 3 முறைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இங்கு வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பதை சரியாக விளங்கிக்கொள்வதே முக்கியமானதாகும். அதற்கிணங்க பரீட்சார்த்திகள் விடைகளை வடிவமைத்தல் வேண்டும். வினாவுக்குச் சம்பந்தமற்ற விடயங்களை விபரமாக எழுதுவதன் மூலம் நேரமே வீண்விரயமாக்கப்படும். அத்தகைய பல சந்தர்ப்பங்கள் விடைகளில் காணப்பட்டன. மிகச் சொற்பளவிலான பரீட்சார்த்திகளே திருப்திகரமான விடைகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

நிறுவனம் ஒன்றின் ஊழியர்களது நெறிமுறையற்ற நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கினை எழுதுவது பகுதி (a) இல் அவசியமாக இருந்தது. இங்கு விபரிப்புகள் எதிர்பார்க்கப்படாததுடன் காரணிகளை பட்டியலிட மாத்திரமே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## பகுதி D

**வினா இல. 10**

இவ்வினா தரப்பட்ட விவரணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்கப்பட வேண்டிய 25 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும். முன்னைய ஆண்டுகளில் கேட்கப்பட்ட வினாக்களுடன் ஒப்பிடு கையில், பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்ததைத் காணக்கூடியதாக இருந்தது.

பகுதி (a) – இவ்வகை கட்டமைக்கப்பட்ட வினாவின் மூலம் தரப்படும் நடப்பு நிலைமையுடன் முகாமைத்துவக் கோட்பாடுகளை ஒத்திசைவாக்குவதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலை பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிணங்க, சரியான புரிந்துணர்வுடன் பிரச்சினையை வாசிப்பது அவசியமானது என்பதுடன் எழுப்பப்பட்ட வினாவுக்கு கோட்பாட்டுப் பகுதிகளை நடைமுறை ரீதியில் ஒத்திசைவாக்குவதும் அவசியமானதாகும். பரீட்சார்த்திகள் ஏதோவொன்றை எழுத முயற்சித்திருப்பதை இங்கு அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வகை வினாக்களுக்கு விடையளிப்பதில் பாட விடயங்களில் சரியான புரிந்துணர்வைக் கொண்டிருப்பது அவசியமாக இருந்த போதிலும் அத்தகைய அம்சங்களில் எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை மதிப்பீட்டுச் செயன்முறையின்போது காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் விவரணத்தைப் புரிந்துகொண்டு வெற்றிகரமான விடைகளை எழுதியிருந்தனர்.

வினாவின் பகுதி (a) ஆனது, ஏன் தீர்மானமெடுத்தல் முக்கியமானது என்பதை பரீட்சிப்பதற்கு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது. தீர்மானமெடுத்தலில் முக்கியமான பல்வேறு அம்சங்கள் காணப்பட்டிருந்த போதிலும், **அக்ரோ மெக் பி.எல்.சி.** இன் நடப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவை எந்த வகையில் முக்கியமாக இருக்கிறது என்பதை விளக்குவது அவசியமானதாகும். உதாரணமாக, விவரணத்தில் கூறப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்காக தீர்மானமெடுத்தல். சந்தைப் பங்கினை மீளக் கைப்பற்றுவதன் பொருட்டு கம்பனியானது பரவலாக்கத்திற்கான தீர்மானத்தை எடுத்திருப்பது மிக முக்கியமானது என்பதை தெளிவாக விபரித்தல் வேண்டும்.

பகுதி (b), திட்டமிடல் செயன்முறையை வழிநடத்துவதற்கான திட்டமிடல் கோட்பாடுகள் 3 இனை விபரிக்குமாறு கோரியிருந்தது. பரீட்சார்த்திகளால் திட்டமிடல் கோட்பாடுகளையும் திட்டமிடல் முறைகளையும் வேறுபடுத்தி அடையாளங் காண்பதற்கு இயலாமற் போயிருந்ததன் காரணமாக வழங்கப்பட்டிருந்த விடைகள் திருப்தியான மட்டத்தில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. திட்டமிடல் கோட்பாடுகளை விபரிப்பதற்குப் பதிலாக வேறு கோட்பாடுகள் விபரிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

வினாவின் பகுதி (c), PEST அணுகுமுறையைப் பயன்படுத்தி கம்பனியின் வியாபாரப் பரவலாக்கத்திற்காக கம்பனியால் சூழல் பகுப்பாய்வு எவ்வாறு கவனத்திலெடுக்கப்படும் என்பதை ஆராய்வதற்கு எதிர்பார்த்தது. சில பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு திருப்திகரமான விடைகளை எழுதியிருந்த அதே நேரம் அவர்களில் சிலர் உள்ளக சூழல்சார்ந்த இயல்புகளை மாத்திரம் எழுதியிருந்தனர். PEST அணுகுமுறைக்குப் பதிலாக SWOT பகுப்பாய்வை விபரித்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

பகுதி (d), நிறுவனத்தின் பயனுறுதிமிக்க தலைவராக CEO வின் பிரதான தொழிற்பாடுகள் மூன்றினை விபரிக்கக் கோரியிருந்தது. வினாவின் இப்பகுதிக்கும்கூட திருப்திகரமான விடைகளைக் காணக்கிடைக்க வில்லை.

- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்கவும்.

2. நீங்கள் வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது)

3. பரீட்சார்த்திகள் வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

4. பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

5. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் சுட்டிலக்கமும் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதை இருதடவைகள் பரீட்சிக்கவும்.

6. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல்வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

8. சுய கற்றல் புத்தகங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், போன்றவற்றை வாசிப்பது விரும்பத்தக்கது.

9. உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்து பயிற்சி பெறவும்.

10. முன்னாயத்தத்துடனும் சித்தியடையும் உறுதியுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -